பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 13 திங்கட்கிழமை 26.04.2021 கதிர் 40

மேலும் சில இடங்கள் தனிமைப்படுத்தலில்

களுத்துறை, கம்பஹா மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் மேலும் சில பிரதேசங்கள் இன்றிரவு 8 மணி முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்படவுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதன்படி, கம்பஹா மாவட்டத்தின் கொட்டதெனியாவ பொலிஸ் பிரிவின்

2

யாழில் தந்தை செல்வாவின் நினைவேந்தல் நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் 44 ஆவது நினைவு தின நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ். தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர்

2

தமிழர் நம்பிக்கை இழக்கவே கூடாது!

தந்தை செல்வா நினைவுப் பேருரையில் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையில் சமாதான சூழலுக்குப் பல்வேறு விதமான சவால்கள் இருந்தாலும், தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கக்கூடாது.

- இவ்வாறு இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.

2

வீட்டிலிருந்து வேலை: ஆராய்கின்றது அரசு!

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, அரச மற்றும் தனியார் துறையினர் வீட்டில் இருந்து வேலை செய்யும் காலத்தை அறிவிப்பது தொடர்பாக அரசு ஆராய்கின்றது.

அரச நிறுவனங்களின் ஊழியர்கள் அலுவலகங்களுக்கு வருவது தொடர்பான புதிய சுற்றறிக்கை ஒன்று நாளை வெளியிடப்படவுள்ளது எனப் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

2

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 177 பேர் கைது!

முகக்கவசம் அணியாமை உட்பட தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 177 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இவ்வாறு கைதானவர்களில் 134 பேர் மேல் மாகாணத்தைச்

2

கொரோனாவின் அபாயத்தால் மூடப்பட்டது வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்!

கொழும்பிலுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதான அலுவலகத்தை தற்காலிகமாக மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பணியகத்தில் பணியாற்றும் ஒருவருக்குக் கொரோனாத்வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2

யாழ். உரும்பிராய் சந்தியில் கோர விபத்து; 15 இராணுவத்தினர் வைத்தியசாலையில்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், உரும்பிராய் சந்திப் பகுதியில் இன்று இடம்பெற்ற வாகன விபத்தில் 15 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

கைதடிப் பகுதியில் இருந்து மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனமும் இராணுவத்தினரை ஏற்றிச் சென்ற வாகனமும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது காயமடைந்த 15 இராணுவத்தினரும்

2

எதிர்க்கட்சியினருக்கு அச்சுறுத்தல் விடுத்து உண்மையை மறைக்க முயல்கின்றது அரசு

ரிஷாத் கைது, ஹரின், மனுஷ மீதான அச்சுறுத்தலை நிபந்தனை இல்லாமல் கண்டிப்போம் என்கிறார் மனோ

ரிஷாத் பதியுதீன் எம்.பி. கைது செய்யப்பட்டுள்ளார். எம்.பிக்களான ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோர் மீதும் கைது மேகங்கள் சூழ்கின்றன. இவற்றை மூலம் இன்றைய அரசு, எதிர்க்கட்சிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்து, நாட்டின் உண்மையான பிரச்சினைகளை மறைக்க முயல்கின்றது. இவை தொடர்பில்

2

எதிர்க்கட்சியினருக்கு அச்சுறுத்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய நாளை ஐக்கிய மக்கள் சக்தியின் விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் இவை பற்றி நாம் ஆழமாக ஆராய்வோம்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் மனோ எம்.பி. இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ரிஷாத் கைது, ஹரின், மனுஷ மீது அச்சுறுத்தல் ஆகியவற்றை நிபந்தனை இல்லாமல் கண்டிப்போம்.

நண்பர் ரிஷாத் மீதான பொதுவான சமூக வலைத்தள குற்றச்சாட்டுகளை நானறிவேன். அவரது கட்சியினர் அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பில் அரசுக்கு ஆதரவளித்த அரசியல் சூழல் தொடர்பிலும் எனக்கு மனவேதனை இருக்கின்றது. ஆனால், இவற்றையே காரணமாக இன்று கூறி, அவரது கைதை நியாயப்படுத்தவோ, அரசின் அராஜகப் போக்குக்கு ஒரு சாட்டு தேடித் தரவோ கூடாது. எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல், அவரது கைதை, அவர் கைது செய்யப்பட்ட முறைமையை நமது கட்சி கண்டிக்கின்றது.

கைது அச்சுறுத்தல் எனக்குப் புதிதல்ல. இதைவிட மிகப் பயங்கரமான 2007ஆம் ஆண்டு, இன்றைய ஜனாதிபதி பலமிக்க பாதுகாப்பு செயலாளராகப் பணியாற்றியபோது, கோர யுத்தம் வடக்கு, கிழக்கில் நடக்கின்றது. அப்போது, எனது தொகுதி கொழும்பில் அடைக்கலம் புகுந்த வடக்கு, கிழக்கு தமிழர்கள் வகைதொகை இல்லாமல் கடத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டு, அவர்களின் சடலங்கள் புறநகர் பகுதிகளில் வீசப்பட்டிருந்த வேளை, அந்த அரச பயங்கரவாத அராஜகத்துக்கு எதிராக தெருவில் இறங்கிப் போராடினேன் என்பதற்காக, என்னைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் வைத்து, கொடுமையாக விசாரித்துப் பயமுறுத்தினார்கள்.

அப்போது எனக்கு ஆதரவாக எந்தவொரு தமிழ், முஸ்லிம் எம்.பியும் வாயைத் திறக்கவில்லை. அரசுடன் சேர்ந்து பலர் அமைதி காத்தார்கள். அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். எம்.பிக்கள் அல்லாத சில சிங்கள முற்போக்காளர்கள் மட்டுமே எனக்காகக் குரல் கொடுத்தார்கள்.

ஆனால், அந்தத் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளின் பெயர்ப்பட்டியலைக் கையில் வைத்துக்கொண்டு இன்று எனது நிலைபாடுகளை நான் தீர்மானிக்க முடியாது. அந்தளவு சிறுமனதாளன் நான் அல்லன்.

இப்போது, பகிரங்கமாகக் கொழும்பில் குடும்பத்துடன் வாழும் ரிஷாத் எம்.பியை, அதிகாலை அமைதியை ஊடறுத்து, அவரது வீட்டைச் சுற்றி வளைத்து, ஒரு பாதாள உலகக் கேடியை இழுத்துச் செய்வதைப் போல் கொண்டு சென்றதன் மூலம் இந்த அரசு எமக்குச் சொல்கின்ற செய்தி என்ன?

தன் மீது குற்றஞ்சாட்ட சாட்சியங்கள் இருந்தால், தன்னை விசாரியுங்கள் என ரிஷாத் எம்.பியே பலமுறை கூறியுள்ளார். ஆனால், எதிர்க்கட்சியில் இருக்கும்போது, தினசரி வரிசையாக வந்து, அவர் மீது சி.ஐ.டியில் புகார் செய்து விட்டு, பின் ஊடகங்களில் வசை பாடிவிட்டு, சாட்சியங்கள் இருக்கின்றன எனக் கூறி விட்டு, ஆட்சிக்கு வந்த ஒரே மாதத்தில் சூத்திரதாரிகளைத் தூக்கில் போடுவோம் எனவும் கூவி விட்டு, ஆளும்கட்சியாக மாறிய பின், சுமார் இரண்டு வருடங்கள் சும்மா இருந்து விட்டு, இப்போது நௌபர் மௌலவி என்பவரே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் சூத்திரதாரி எனவும் அறிவித்து விட்டு, இப்போது ரிஷாத்தை இந்த அரசு கைது செய்துள்ளது.

கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, நௌபர் மௌலவியை சூத்திரதாரியாக ஒப்புக்கொள்ளாததால், அவரை சமாளிக்க ரிஷாத் எம்.பியை இந்த அரசு கைது செய்கின்றது என்ற பலத்த சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

இதேபோல்தான், நண்பர்களான எம்.பிக்கள் ஹரின், மனுஷ ஆகியோர் மீதும் கைது மேகங்கள் சூழ்கின்றன. நாளை இது இன்னும் மேலும் பலரையும் சுற்றிவளைக்கும். ஆகவே, நாம் இந்தப் பின்னணியைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ரிஷாத் கைது பற்றி, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துடன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவராக நான் பேசினேன். நாளை செவ்வாய்க் கிழமை ஐக்கிய மக்கள் சக்தியின் விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் இவை பற்றி நாம் ஆழமாக ஆராய்வோம் - என்றுள்ளது.

யாழ். உரும்பிராய் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் சேதமடைந்த இராணுவ வாகனம் பலாலி இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை இராணுவ அதிகாரிகளும் பொலிஸாரும் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழர் நம்பிக்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கில் தந்தை செல்வாவின் 44 ஆவது நினைவுநாள் நிகழ்வு நேற்று இன்று நடைபெற்றது. இதில் முன்னேற்றத்தின் வழிகளில் இணக்கம் காணுதல்' எனும் தலைப்பில் கலாநிதி ஜெஹான் பெரேரா நினைவுப் பேருரையாற்றினார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த நாம் தொடர்ச்சியாக முயற்சிக்க வேண்டியுள்ளது.

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாக ஓர் அதிகாரப் பகிர்வு முறைமை ஏற்படுத்தப்பட்டாலும், அது முழுமை பெறாத நிலைமை தொடர்கின்றது. அதன் குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

தற்போதைய அரசு அதிகாரப் பரவலாக்கல் முறைமைகளை முற்றாக அகற்றுவதற்கான ஆணையை மக்கள் தமக்கு வழங்கி இருக்கின்றார்கள் என்ற தப்பான சிந்தனையோடு ஆட்சிப்பீடம் ஏறியுள்ளனர்.

பௌத்த மதத்தையும் இந்தத் தீவையும் பாதுகாக்கும் பொறுப்பு தம்மிடம் வழங்கப்பட்டுள்ளது என நம்பும் சிங்கள மக்கள், சிறுபான்மையினரின் மன நிலையுடன் பெரும்பான்மையினராக வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ் மக்கள் வேறு பிரதேசங்களில், வித்தியாசமாக கலாசார, மொழி பின்னணியுடன் வாழ்ந்து வரும் நிலையில் இந்தத் தீவில் எப்படியான நிர்வாகத்தைச் செய்ய வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையில் இம்முறை தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில், 18 மாத காலத்துக்கு இலங்கை மீதான கண்காணிப்பு கடுமையாக இருக்கும்.

ஐ.நா. தீர்மானத்தில் பொறுப்புக்கூறல் என்ற விடயம் உறுதியாக வலியுறுத்தப்பட்டுள்ளது - என்றார்.

இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன் மற்றும் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.

கொரோனாவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி அங்கு தொற்று நீக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும், இதனால் நாளையும் (செவ்வாய்), நாளைமறுதினமும் (புதன்) பணியகத்தின் பத்தரமுல்லையிலுள்ள பிரதான அலுவலகம் மூடப்பட்டிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பணியகத்தின் விமான நிலையக் கிளை தொடர்ந்தும் இயங்கும் என்று பணியகம் அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

ஏதேனும் தகவல்களைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் 1989 என்ற இலக்கத்தை அழைத்துப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தவர்களாவர்.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலால் இரண்டு வாரங்களுக்கு எந்தவொரு நிகழ்வையும் நடத்தக்கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அரச அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டால் அதற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

வீட்டிலிருந்து வேலை: .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா பரவுவதைத் தடுப்பதற்கும் அரச சேவையை வினைத்திறன் மிக்க முறையில் கொண்டு செல்வதற்கும் இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது என அமைச்சின் செயலாளர் ஜெ.ஜெ. ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், அரச அலுவலகங்களுக்கு 50 வீதமான ஊழியர்கள் சுழற்சி அடிப்படையில் வருவதற்கு அனுமதிக்கப்படவுள்ளனர் என்று தெரியவருகின்றது.

ஏனையோர் வீட்டில் இருந்து பணியாற்றவும் அனுமதிக்கப்படவுள்ளனர்.

இது தொடர்பான சுற்றறிக்கை நாளை அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது எனவும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழில் தந்தை செல்வா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவை சேனாதிராஜா தலைமையில் நினைவு தின நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடக்குமாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன், யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரெட்ணம் அடிகளார், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் ஆகியோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

மேலும் சில இடங்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொல்ஹேன, ஹீரெலுகெதர, களுவக்கல ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும், மினுவாங்கொடை பொலிஸ் பிரிவின் அஸ்வென்னவத்தை வடக்கு மற்றும் கிழக்கு கிராம சேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்படவுள்ளன.

அத்தோடு, களுத்துறை மாவட்டத்தின் மீகாத்தென்னை பொலிஸ் பிரிவின் மிரிஸ்வத்தை, மற்றும் பெலவத்தை வடக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்படவுள்ளன.

இதேவேளை, திருகோணமலை பொலிஸ் பிரிவின் பூம்புஹார் கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikathiradvt@
gmail.com
தொலைபேசி
இலக்கம்-
076 443 8622

வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் உள்ள குளிர்பான விநியோகஸ்த நிலையத்துக்கு
SALES REP தேவை.
மாதம் 45,000 சம்பாதிக்கலாம்.
தொடர்புகளுக்கு
0774737737/ 0773257747

A/L கணக்கீடு
அன்றும்.. இன்றும்.. என்றென்றும்...
உங்கள் கணக்கீட்டு ஆசிரியர்
Mr.K. BALAKAJEN
B.Com (Jaf), H.N.Dip-in-Acc (ATI), Dip-in-Edu (OUSL), M.Com (Hons) Acc.Spl

கந்தர்மடச் சந்தி யாழ்ப்பாணம்	சுவாமியார் வீதி கொழும்புத்துறை
சனி, ஞாயிறு 6.00 - 8.00 a.m	சனி, ஞாயிறு 2.00 - 7.00 p.m
வியாழன் 5.00 - 8.00 p.m	புதன் 6.00 - 9.00 p.m
ZOOM Classes (வெளி மாணவர்களுக்கானது)	திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி 7.30 - 10.15 p.m

Theory + Paper + Mcq + Model exam
0772168884

கொழும்பு மற்றும் கிழக்கிலும்
41 ஆவது இதழ்
செம்மணி
அமைதியாகத் திறக்கப்பட்டது முள்ளிவாய்க்கால் தூபி
வாசிக்கத் தவறாதீர்கள்
அனைத்து முகவர்களிடமும் கேட்டு வாங்குங்கள்
வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில்
சிறைக்குள்....
விலத்த வழியிருக்கோ
செயல்களின் விளைவுகள்
மீண்டும் அச்சுறுத்தல்
வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

சலூன் கதவு அரசியல்

ராஜபக்ஷக்கள் அதிகாரத்துக்கு வந்ததும் தமது மிதப்புப் பேச்சை ஆரம்பித்து விட்டார்கள்.

“அரசு முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களை அரசுக்குள் இருந்து விமர்சிக்கும் நபர்கள் அரசில் இருந்து வெளியேறித் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும். அரசில் இருந்து வெளியேற நினைப்பவர்களுக்கான கதவுகள் திறந்தே உள்ளன.”

– இப்படிக் கூறியிருக்கின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மத்தியில் ஆவேசத்துடன் அவர் இவ்வாறு கூறினார் எனச் செய்திகள் வெளிவந்துள்ளன.

அவர் அப்படிப் பேசுவது ஒன்றும் புதுமையல்ல. அதிகாரம் கிட்டியதும் அப்படிப் பேசுவது – திமிர்த்தனத்தோடு கருத்து வெளியிடுவது – அதுவும் கதவு திறந்திருப்பது குறித்து பகிரங்கமாகக் கூறுவது – புதிய விடயங்களே அல்ல.

2015 ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கை மக்கள் பாடம் புகட்ட முன்னரும் கூட, இப்படித்தான், அவர் மட்டுமல்ல, எல்லா ராஜபக்ஷக்களுமே பேசினர்.

2009 யுத்தம் முடிந்த கையோடு, 2010 ஜனவரியில் தாம் நடத்திய ஜனாதிபதித் தேர்தலில் பெரு வெற்றியீட்டி மீளவும் அதிகாரத்தை உறுதிப்படுத்தினார் மஹிந்த ராஜபக்ஷ.

அதையடுத்து மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் குதித்து தொடர்ந்து அதிகாரத்தில் இருக்க விரும்பிய அவர், அதற்காக ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இருந்த கட்டுப்பாட்டு விதிகளை மாற்ற முனைந்தார்.

ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் மக்களினால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட முடியாது என்ற அரசமைப்பு ஏற்பாட்டை மாற்றி, ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு இத்தகைய் எந்தக் கட்டுப்பாடும் இல்லை என்ற ரத்தைப் புகுத்த விரும்பினார். அதே சமயம் ஜனாதிபதிப் பதவியின் அதிகாரத்தைக் கட்டுமட்டில்லாமல் உயர்த்தவும் விழைந்தார். அதற்காக 18 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நாடாளுமன்றுக்குக் கொண்டு வந்தார். அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவைப் பெறுவதற்காக எதிரணியில் இருந்த எம்.பிக்களை வளைத்துப் போட வேண்டியிருந்தது. இந்த விடயத்தில் பழமும் தின்று கொட்டையும் போட்டவரான அவரது சகோதரர் பஸில் ராஜபக்ஷ எதிரணியினரை விலைக்கு வாங்கும் குதிரைப் பேரத்தை முன்னெடுத்தார். அந்தச் சமயத்தில் எதிரணியில் இருந்த பலரைத் தமது ஆளும் தரப்புக்கு இழுப்பதற்காக ஆளும் தரப்பின் கதவுகளை அகலத் திறந்து விட வேண்டியிருந்தது.

அதன் மூலம் 18 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றி, தேவையான அளவு அதிகாரத்தை வலுப்படுத்திக் கொண்டதும் பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக் கொள்ளும் பண்பியல்பு ராஜபக்ஷக்களைத் தொற்றிக் கொண்டது. அதிகார மமதையில் திமிர்ப் பேச்சுக்களை அவர்கள் வெளிப்படுத்தினர். ஆளும் கூட்டணியில் இருந்து வெளியேறுபவர்கள் வெளியேறலாம் என்றனர் அவர்கள்.

சற்றுக் காலத்துக்கு முன்னர்தான் ஆளும் கூட்டணியின் கதவுகளை அகலத் திறந்து எதிரணியினரை வளைத்துப் பிடித்துத் தமது அணிக்குள் உள்ளே கொண்டு வந்திருந்தனர் ராஜபக்ஷக்கள். இப்போது விடயம் ஒப்பேறியதும் விருப்பமில்லாதோரைத் துரத்தும் எண்ணம் அவர்களுக்கு வந்து விட்டது. அதற்கும் ஆளும் தரப்பின் கதவுகளை அகலத் திறக்க வேண்டியிருந்தது.

அதனால், ஆளும் கட்சியின் கதவு சலூன் கதவு போன்றது என்றனர் ராஜபக்ஷக்கள். பொதுவாக சலூன் கதவுகள் இரண்டு பக்கமும் திறக்கக் கூடியவை. நீங்கள் வெளிப்பக்கமாகத் தள்ளித் திறந்து கொண்டு வெளியேறவும் போகலாம் அல்லது வெளியில் இருந்தபடி உள்பக்கமாகத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளேயும் போகலாம்.

அதாவது, ஆட்சி அதிகாரத்துடன் இணைய எதிரணிகள் விரும்பினால் ஆளும் கூட்டணிக்குள் வரலாம். அதேபோல ஆளும் கூட்டணியில் இருப்போர் விரும்பினால் அரசை விட்டு வெளியேறலாம். இந்த இரண்டு தரப்பினருக்கும் வாய்ப்பளிக்கக் கூடிய விதத்தில் இரண்டு பக்கமும் திறக்கப்படக் கூடியவாறு ஆளும் கூட்டணியின் கதவு சலூன் கதவு போல அமைந்துள்ளது, விரும்புபவர்கள் திறந்து கொண்டு வாருங்கள், விரும்பாதோர் தம்பாட்டில் திறந்து கொண்டு வெளியேறிச் செல்லலாம் என்று அப்போது பிரகடனப்படுத்தினர் ராஜபக்ஷக்கள்.

மைத்திரிபால சிறிசேன உட்பட அப்போதைய ஆளும் கட்சியின் பிரதான தரப்புகள் எல்லாம் இத்தகைய சலூன் கதவு வாசலைத் தள்ளித் திறந்து கொண்டு வெளியேறிமையால்தான் 2015 இல் தோற்று ஐந்து வருடங்கள் அம்பாந்தோட்டை கால்டன் இல்லத்தில் சுமார் ஐந்து வருடங்கள் வனவாசம் போல தஞ்சம் புகும் அவலம் ராஜபக்ஷக்களுக்கு ஏற்பட்டது.

மீண்டும் அதே சலூன் கதவுக் கதைப் பேச்சை ஆரம்பித்திருக்கிறார் மஹிந்தர். பழைய துன்பியல் அனுபவம் கிட்டாமல் பார்த்துக் கொள்வது அவர் பொறுப்பு.

பொதுபல சேனாவை ஏன் தடைசெய்யவில்லை?

நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் காட்டம்

தேசிய நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பொதுபல சேனா அமைப்பு செயற்படுகிறது.

ஆகவே அந்த அமைப்பு தடை செய்யப்பட வேண்டும் என ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள போதும் இதுவரையில் பொதுபல சேனா அமைப்பு தடை செய்யப்படவில்லை.

மாறாக, அறிக்கையில் குறிப்பிடப்படாத பல அமைப்புக்களே தடை செய்யப்பட்டுள்ளன என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவித்தார்.

குண்டுத்தாக்குதலுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் எனப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்பு செயலாளர், பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கைகளும் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் போன்றவை நடைபெற பொதுபல சேனா போன்ற அமைப்புகளே காரணமாக அமைவதாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகவே பொது பலசேனா அமைப்பு தடைசெய்யப்பட வேண்டும் எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பொதுபல சேனா அமைப்பை இதுவரையில் தடை செய்யப்படவில்லை

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இப்போது பொது பல சேனா போன்ற அமைப்புகள் தடைசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் பொதுபல சேனா உள்ளிட்ட ஒரு சில அமைப்புக்கள் இதுவரையில் தடை செய்யப்படவில்லை. மாறாக அறிக்கையில் குறிப்பிடப்படாத அமைப்புக்கள் பல தடை செய்யப்பட்டுள்ளன.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட நால்வருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு எதிராக இதுவரை எவ்வித நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படாத நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டுள்ளமை குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.– என்றார்.

ஊடகவியலாளர் அமரர் ரூபனுக்கு பொன்னாலையில் நினைவேந்தல்!

சுகாதார விதிமுறைக்கு அமைய இடம்பெற்றது

ஊடகவியலாளர் அமரர் செ.ரூபனின் 11 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு பொன்னாலை வெண்கரம் படிப்பகத்தில் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின்போது, ரூபனின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி இடம்பெற்றது. தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன.

ஊடகப்பணியாளரும், சமூக செயற்பாட்டாளருமான ந.பொன்ராசா, பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன், வெண்கரம் செயலாளர் ஆசிரிய ஆலோசகர் திருமதி சு.சண்முகேந்திரன் மற்றும் பொன்னாலை ஸ்ரீகண்ணன் சனசமூக நிலையத் தலைவர் செ.றதீஸ்வரன் உள்ளிட்டோர் நினைவுரைகளை ஆற்றினர்.

கொவிட் – 19 சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக குறிப்பிட்ட சில மாணவர்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான சமூக செயற்பாட்டாளர்களுடன் இந்த நினைவேந்தல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

சகோதரன் பொல்லால் தாக்கி ஒருவர் பரிதாபகரமாகச் சாவு

மினுவாங்கொடையில் இளைய சகோதரனால் பொல்லால் தாக்கப்பட்டு மூத்த சகோதரன் கொல்லப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

மினுவாங்கொடை – வட்டினாபஹா பிரதேசத்தில் 27 வயதுடைய இளைய சகோதரனால் 32 வயதுடைய மூத்த சகோதரன் பொல்லால் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளதோடு, கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார். மினுவாங்கொடை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

புத்தாண்டுக்கு முன்னரும் , புத்தாண்டின் பின்னரும் இவ்வாறு குடும்ப அங்கத்தவர்களுக்கிடையில் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் கவலைக்குரியதாகும். எனவே இவற்றை தவிர்த்துக் கொள்ளுமாறு சகலரிடமும் கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

ஸ்டெர்லைட்டில் ஒக்சிஜன் உற்பத்தியை 4 மாதங்களுக்கு மட்டும் அனுமதிக்கலாம்!

'ஸ்டெர்லைட்டில் ஒக்சிஜன் உற்பத்தியை 4 மாதங்களுக்கு மட்டும் அனுமதிக்கலாம்' என்று முதல்வர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

ஒக்சிஜன் உற்பத்திக்காக மட்டும் தற்காலிகமாக ஸ்டெர்லைட் ஆலையை திறக்கலாம் என அனைத்துக் கட்சிகள் கூட்டத்தில் பலரும் கருத்து தெரிவித்துள்ளனர். இதையடுத்து, ஸ்டெர்லைட்டில் 4 மாதங்களுக்கு மட்டும் ஒக்சிஜன் உற்பத்திக்கு அனுமதிக்கலாம் என்று முதல்வர் பழனிசாமி கூறியுள்ளார்.

ஸ்டெர்லைட் ஆலையை திறப்பது அரசின் நோக்கமல்ல நாளுக்கு நாள் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும்நிலையில், ஒக்சிஜன் தேவையும் அதிகரித்துள்ளது. எனவே ஸ்டெர்லைட்டில் 4 மாதங்களுக்கு மட்டும் ஒக்சிஜன் உற்பத்திக்கு அனுமதிக்கலாம். ஒக்சிஜன் உற்பத்தியை உள்ளூர் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய குழு அமைத்து கண்காணிக்க ஏற்பாடு செய்யப்படும் என்று அனைத்துக் கட்சிகள் கூட்டத்தில் பேசியபோது முதல்வர் பழனிசாமி கூறினார்.

அரசின் இந்த முடிவுக்கு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ ஆதரவு தெரிவித்துள்ளார். 'அரசின் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டு ஸ்டெர்லைட்டில் ஒக்சிஜன் உற்பத்தியை அனுமதிக்கலாம்' என்று அவர் கூறியுள்ளார்.

'எக்காரணம் கொண்டும் ஆலையை இயக்க ஸ்டெர்லைட் நிர்வாகத்திற்கு அனுமதி தரக்கூடாது' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா நெருக்கடியால் இந்தியாவுக்கு உதவிகள்: கூகுள், மைக்ரோசொவ்ட் தலைமை அதிகாரிகள் அறிவிப்பு

கொரோனா நெருக்கடியால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் இந்தியாவுக்கு கூகுள் நிறுவனம் 135 கோடி ரூபா நிதியுதவி செய்யவுள்ளது என கூகுள் நிறுவன தலைமை அதிகாரி சுந்தர் பிச்சை தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் கொரோனா நெருக்கடிக்கு தீர்வு காண கூகுள் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர் பிச்சை, மைக்ரோசொவ்ட் தலைமை நிர்வாக அதிகாரி சத்யா நதெல்லா ஆகியோர் உதவிக்கரம் நீட்டியுள்ளனர்.

கூகுள் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர் பிச்சை, இந்தியாவில் ஏற்பட்டுள்ள மோசமான கொவிட் நெருக்கடிக்கு நிவாரணமாக கூகுள் மற்றும் கூகுள் நிறுவனங்கள், யுனிசெப் மூலமாக மருத்துவப் பொருள்கள் வாங்க 135 கோடி ரூபா நிதியுதவி அளிக்கின்றன. அதிக ஆபத்துள்ள சமூகங்களுக்கு ஆதரவளிக்கவும், முக்கியமான விழிப்புணர்வுத் தகவல்களைப் பரப்பவும் உதவி செய்வோம் என்று தனது டுவீட்டில் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவின் கொரோனா நெருக்கடி பற்றி டுவீட் செய்திருக்கும் மைக்ரோசொப்ட் தலைமை நிர்வாக அதிகாரி சத்யா நதெல்லா, இந்தியாவின் தற்போதைய சூழ்நிலை மனதை உடைய வைத்துள்ளது. அமெரிக்க அரசு இந்தியாவுக்கு உதவ முன்வந்ததற்கு நான் நன்றி தெரிவிக்கிறேன். மைக்ரோசொவ்ட், அதன் வளங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை இந்தியாவின் நிவாரண முயற்சிகளுக்கு உதவுவதற்கும், மிக முக்கியமான ஒக்சிஜன் சாதனங்களை வாங்குவதற்கும் தொடர்ந்து பயன்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரம் ஒரு நாள் பாதிப்பு 3.52 லட்சத்தைத் தாண்டியது

இந்தியாவில் இதுவரை இல்லாத அளவாக ஒரு நாள் கொரோனா பாதிப்பு 3.52 லட்சத்தை தாண்டியுள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்படுவர்களின் எண்ணிக்கை தினம் தினம் புதிய உச்சத்தை எட்டி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த 24 மணி நேரத்தில் இந்தியாவில் மூன்று லட்சத்து 52 ஆயிரத்து 991 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா பாதிப்பால் இதுவரை இல்லாத அளவாக 2,812 பேர் உயிரிழந்துள்ளனர். தொற்று பாதிப்பில் இருந்து நேற்று குணமடைந்தவர்கள் எண்ணிக்கை இரண்டு லட்சத்து 19 ஆயிரத்து 272 ஆக உள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா பாதித்தவர்கள் எண்ணிக்கை ஒரு கோடியே 73 லட்சத்து 13 ஆயிரத்து 163 பேர் ஆக உயர்ந்துள்ளது. தொற்றுப் பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்கள் எண்ணிக்கை ஒரு கோடியே 43 லட்சத்து 4 ஆயிரத்து 382 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவுக்கு உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை ஒரு லட்சத்து 95 ஆயிரத்து 123 ஆக உயர்ந்துள்ளது. தொற்றுக்கு சிகிச்சை பெறுபவர்கள் எண்ணிக்கை 28 லட்சத்து 13 ஆயிரத்து 658 ஆக உள்ளது. இதுவரை 14,19,11,223 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

கர்நாடகாவில் அடுத்த 14 நாட்களுக்கு முழு ஊரடங்கு என எடியூரப்பா அறிவிப்பு

கர்நாடகத்தில் கொரோனாப் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் மாநிலத்தில் இரவு நேர ஊரடங்கு இரவு 9 மணி முதல் காலை 6 மணி வரையில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் வருகின்ற 4, 5 ஆம் திகதி வரை வார இறுதியில் சனி, ஞாயிறு ஆகிய 2 நாள்கள் முழு ஊரடங்கை அரசு அமுல்படுத்தியுள்ளது.

எனினும் கொரோனாப் பாதிப்பு நாளுக்கு நாள் புதிய உச்சத்தை தொட்டு வருகிறது. எனவே, ஊரடங்கை நீடிப்பது குறித்து அரசு ஆலோசித்து வந்தது. இதுதொடர்பாக முதலமைச்சர் எடியூரப்பா தலைமையில் இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இதில் முழு ஊரடங்கை மாநிலம் முழுவதும் நீடிக்க முடிவு செய்யப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த முதல்வர் எடியூரப்பா, கர்நாடகாவில் அடுத்த 14 நாள்களுக்கு முழு ஊரடங்கு அமுல்படுத்தப்படும் என அறிவித்தார். நாளை இரவு முதல் முழு ஊரடங்கு அமுலுக்கு வருகிறது.

அத்தியாவசிய சேவைகள் காலை 6 மணி முதல் 10 மணி வரை அனுமதிக்கப்படுகின்றன. காலை 10 மணிக்குப் பிறகு கடைகள் மூடப்படும். கட்டுமானப் பணிகள், உற்பத்தி மற்றும் விவசாயப் பணிகள் மட்டுமே அனுமதிக்கப்படும். பொதுப் போக்குவரத்து நிறுத்தப்பட வேண்டும் என எடியூரப்பா கூறினார்.

இன்று முதல் தமிழகத்தில் வங்கிச் சேவை நேரம் குறைப்பு

கொரோனாப் பரவலை தடுக்க முன்னேற்பாடு

கொரோனாப் பரவலைத் தடுக்க தமிழகத்தில் வங்கிகள் செயல்படும் நேரம் குறைக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் வரும் 30 ஆம் திகதி வரை வங்கிகள் காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மட்டுமே செயல்படும் என வங்கிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கிப் பணியாளர்கள் இணை நோயுள்ளவர்களாகவும், கர்ப்பிணிகளாகவும், பார்வை மாற்றுத் திறனாளிகளாகவும் இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு வீட்டிலிருந்தே பணிபுரியும் வாய்ப்பு அளிக்கப்படுகின்றது என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வங்கிகளில் உள்ள ஆதார் திருத்த மையங்களின் பணிகளும் நிறுத்தி வைக்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. வங்கிகளின் செயல்பாட்டு நேரம் குறைக்கப்பட்டாலும் ஏ.டி.எம். சேவைகளில் எவ்வித பாதிப்புகளும் இல்லாமல் தங்குதடையின்றி இயங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

விமர்சனங்களை ஏற்க மக்கள் நீதி மய்யம் தயாராக இருக்கிறது! இணையவழிக் கருத்தரங்கில் கட்சித் தலைவர் கமல் ஹாசன்

தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலின் முடிவுகளை எதிர்நோக்கி அரசியல் கட்சிகள் காத்திருக்கின்றன. ஐந்து முனைப் போட்டியாக அமைந்த தேர்தல் களத்தில் மக்கள் நீதி மய்யம் தலைமையிலான கூட்டணியும் போட்டியிட்டிருந்தது. கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் கட்சித் தலைவர்கள் நேரடிக்கூட்டங்களைத் தவிர்த்து, இணைய வழியில் கட்சியினரைத் தொடர்பு கொண்டு உரையாடுகின்றனர்.

மக்கள் நீதி மய்யம் சார்பில் 'உள்ளாட்சியில் தன்னாட்சி' என்ற இணையவழிக் கருத்தரங்கு நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பேசிய அக்கட்சியின் தலைவர் கமல் ஹாசன், "கிராம சபை கூட்டத்தை நாம் கண்டுபிடிக்கவில்லை. இராஜராஜ சோழன் காலத்திலேயே இது மாதிரி பலசபைகள் இருந்தன. இதனை நான் சுட்டிக்காட்டினேன். அவ்வளவு தான். ஜனநாயகத்தில் மக்களின் பங்களிப்பு இல்லாமையை நாம் தீர்க்க வேண்டும்.

விமர்சனங்களை ஏற்க மக்கள் நீதி மய்யம் தயாராக இருக்கிறது. எங்கள் கட்சி முழுமையாகத் தூய்மையான கட்சி என்று நான் சொல்ல மாட் டேன். நம்மில் அழுக்கு இருக்கிறதா என்பதைத் துருவித் தேடும் ஆளாக நான் இருக்கிறேன். கட்சியில் தலைவர்களைத் தேடிக் கொண்டிருக்கிறேன். அவ்வாறு இல்லாதவர்களை நீக்க வேண்டியது என் தலையாய பணி.

டாஸ்மாக் மற்றும் 100 நாள்கள் வேலைவாய்ப்பு திட்டம் எல்லாம் கண் துடைப்புத்தான். அவை மக்களை இன்னும் சோம்பேறி ஆக்குபவை. 100 நாள்கள் வேலைத் திட்டத்தில் காசு கொடுத்து, அதை செலவு செய்ய டாஸ்மாக்கையும் நடத்துகிறார்கள். இதுதான் இங்கே நடைமுறையாக இருக்கிறது.

இளைய சமுதாயம் ஊக்குவிக்கப்பட வேண்டும். அவர்கள் தீவிர அரசியலில் இறங்க வேண்டும். செயல்பட்டால் தான் தீர்வு கிடைக்கும்.

தேர்தல் முடிவுகள் எப்படி வேண்டுமானாலும் வரட்டும். ஆனால், நம் பணிகளைச் செய்து கொண்டே இருக்க வேண்டும். கோட்டையில் இருந்து செய்வது மட்டும் ஆட்சி அல்ல. கிராமம், வார்டுகளில் இருந்தும் செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஒரு கடற்பறவையின் மீது மற்றொரு பறவை

கடற்பறவைகளின் வித்தியாச பயணம்

ஒரு கடற்பறவையின் மீது மற்றொரு கடற்பறவை அமர்ந்து கொண்டு ஒய்யாரமாக சவாரி செய்யும் காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

எங்கு, எப்போது எடுக்கப்பட்டது என்ற விவரங்கள் வெளியாகாத நிலையில், டுவிட்டரில் இடம்பெற்ற இந்த வீடியோ, 2 லட்சத்துக்கு மேற்பட்ட முறை பார்க்கப்பட்டுள்ளது. அந்த வீடியோவில், ஒரு கடற்பறவை மீது மற்றொரு பறவை அமர்ந்து கொண்டு சிறிதுதூரம் பயணிக்கிறது.பின் இரண்டும் பிரிந்து தனித்தனியாக பறந்து சென்றது.

இந்தியாவின் அவசர நிலையை அடுத்து

80 மெற்றிக் தொன் ஒக்சிஜனை அனுப்பும் சவுதி அரேபியா

இந்தியா முழுவதும் கொரோனா வைரஸ் 2 ஆவது அலை தீவிரமாகப் பரவி வரும் நிலையில், பல மாநிலங்களின் மருத்துவ மனைகளில் ஒக்சிஜன் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இதையடுத்து, உள்நாட்டில் ஒக்சிஜன் உற்பத்தியை அதிகப்படுத்தி தேவையான இடங்களுக்கு விரைந்து கொண்டு சேர்க்க மத்திய அரசு தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

அதேவேளையில் உலக நாடுகள் பல இந்தியாவுக்கு உதவும் வகையில் ஒக்சிஜனை வழங்கி வருகின்றன. அந்த வகையில் சவுதி அரேபியா 80 மெற்றிக் தொன் திரவ ஒக்சிஜனை இந்தியாவுக்கு அனுப்பவுள்ளது. அதானி குழுமம் மற்றும் லிண்டே நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் சவுதி அரேபியா இந்தியாவுக்கு ஒக்சிஜனை ஏற்றுமதி செய்யவுள்ளது என சவுதி அரேபியாவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

எவரெஸ்ட் சிகரம் ஏறிய வீரருக்கு கொரோனா உறுதி

கொரோனா கிருமி தற்போது உலகின் உயர்ந்த சிகரமான எவரெஸ்ட்டையும் தொட்டுள்ளது.

நோர்வே நாட்டைச் சேர்ந்த மலையேற்ற வீரர் எர்லண்ட் நெஸ் என்பவர் எவரெஸ்ட் சிகரத்தின் அடியில் உள்ள முகாமில் தங்கியிருந்தார். அப்போது அவருக்கு உடல் உபாதைகள் ஏற்பட்டன. இதையடுத்து எர்லண்டை சோதனை செய்தபோது, அவருக்கு கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து எர்லண்ட் நெஸ் உடனடியாக ஹெலிக்கொப்டர் மூலம் தரைத் தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டார்.

தற்போது அவரின் நிலைமை சிக்கலாக இருப்பதால் ஏனைய மலையேற்றக் குழுவினரை என்ன செய்வது என நேபாள அரசு யோசனை மேற்கொண்டு வருகிறது.

இந்தியாவுடனான எல்லையை இழுத்து மூடிய வங்காளதேசம்

இந்தியாவில் கொரோனா வைரஸ் 2 ஆவது அலை வேகமாகப் பரவி வருகிறது. தினந்தோறும் 3 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு புதிதாக வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு வருகிறது. இதனால் இந்தியாவில் உள்ள பெரும்பாலான மருத்துவ மனைகள் கொரோனா நோயாளிகளால் நிரம்பி வழிகின்றன.

இதன் காரணமாக பல நாடுகள் இந்தியாவுடனான விமானப் போக்குவரத்துக்குத் தடை விதித்துள்ளன. இந்த நிலையில் இந்தியாவில் கொரோனா வைரஸ் தொடர்ந்து அதிகரித்து வருவதால் அண்டை நாடான வங்காள தேசம் இந்தியாவுடனான எல்லையை மூடியுள்ளது.

இதுகுறித்து அந்த நாட்டின் வெளியுறவு மந்திரி ஏகே அப்துல் மோமன் கூறுகையில், “இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றின் விரைவான அதிகரிப்பு காரணமாக இந்தியாவுடனான எல்லையை இன்று (திங்கட்கிழமை) முதல் 2 வாரங்களுக்கு மூடுகிறோம். அதே சமயம் இரு நாடுகளுக்கிடையில் சரக்கு வாகனங்கள் போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்படும்” என்றார்.

முன்னதாக கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இந்தியாவுடனான விமானப் போக்குவரத்துக்கு கடந்த 14 ஆம் திகதி வங்காளதேச அரசு தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

Welcome
Hero

93வது ஒஸ்கார் விருதுகள் அறிவிப்பு சிறந்த இயக்குநராக குளோயி சாவ்



அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 93 ஆவது ஒஸ்கார் விருது வழங்கும் விழா நடைபெற்று வருகிறது. இதில் பல்வேறு பிரிவுகளில் விருதுகள் அறிவிக்கப்பட்டு வருகிறது. காலை 7 மணியளவில் ஆரம்பித்த இந்த நிகழ்ச்சி தொகுப்பாளர் இன்றி நடந்து வருகிறது.

சிறந்த இயக்குநர் விருதை நோ மேட் லாண்ட் படத்துக்காக சீன பெண் இயக்குநர் குளோயி சாவ் பெற்றார். சிறந்த துணை நடிகை ஜூடாஸ் அண்ட் தி பிளாக் மெசியா படத்துக்காக டேனியல் கல்லூயாவுக்கும், சிறந்த திரைக் கதைக்கான விருதை பிராமிசிங் யங்வுமன் படத்துக்காக எமரால்டு பென்னலும் பெற்றுக்கொண்டனர்.

சிறந்த தழுவல் திரைக்கதைக்கான விருதை தி பாதர் படத்துக்காக கிறிஸ்டோபர் புளோரியன் பெற்றார். சிறந்த வெளிநாட்டு திரைப் படத்துக்கான விருதை டென்மார்க்கின் அனதர் ரவுண்ட் பெற்றது.

தொடர்ந்து பல்வேறு விருதுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் கொரோனாவைக் கட்டுப்படுத்த சர்வதேச நாடுகள் பலவும் விரைந்து உதவிக்கரம்

இந்தியாவில் கொரோனா பரவல் மோசமான நிலையில் இருப்பதால் அதை கட்டுப்படுத்துவதற்கு சர்வதேச நாடுகளும் உதவ முன்வந்துள்ளன.

தற்போது ஒக்சிஜன், வெண்டிலேட்டர் கருவிகள், மருத்துவ சாதனங்கள் தேவை அதிகமாக இருக்கிறது. இவற்றை வழங்குவதற்கு பல நாடுகளும் முன்வந்துள்ளன.

இதில் இங்கிலாந்து 495 ஒக்சிஜன் உற்பத்தி இயந்திரங்களை இந்தியாவுக்கு அனுப்பி வைக்கிறது. மேலும் 120 வெண்டிலேட்டர் கருவி, 2 பிரதான வெண்டிலேட்டர் கருவிகள், 60 மருத்துவ சாதனங்கள் மற்றும் பல்வேறு கருவிகள், சிகிச்சை உதவி சாதனங்களை அனுப்பி வைக்கிறது.

இவை 9 விமானங்களில் அனுப்பி வைக்கப்படுகின்றன. இதன் முதல் பகுதி நாளை இந்தியா வந்து சேர்கிறது.

இதேபோல ஜேர்மனி இந்தியாவுக்கு அவசரகால உதவிகளை செய்வதற்கு தயாராக இருக்கின்றது என அதிபர் ஏஞ்சலா மார்கல் அறிவித்துள்ளார்.

ஐரோப்பிய யூனியன் கமிஷனர் உர்சுலா வான் கூறும்போது, இந்தியாவில் ஏற்பட்டுள்ள நிலைமைகளை கட்டுப்படுத்த அனைத்து உதவிகளையும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் செய்யும் என்று கூறியுள்ளார்.

இதேபோல அமெரிக்காவும் இந்தியாவுக்கு ஏராளமான உதவிகளை செய்ய இருப்பதாக அறிவித்துள்ளது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் கொவிஷீல்டு தடுப்பூசி மருந்துக்கு பெருமளவு மூலப்பொருள்கள் அமெரிக்காவிடம் இருந்துதான் வருகின்றன. ஆனால் உள்நாட்டுத் தேவையை கருதி வெளிநாடுகளுக்கு இதுபோன்ற பொருள்கள் ஏற்றுமதிக்கு அமெரிக்கா தடை விதித்தது.

இதன் காரணமாக கொவிஷீல்டு மருந்து தயாரிப்புக்கு மூலப்பொருள் கிடைக்காத நிலை உருவானது. இதனால் மருந்து உற்பத்தி பாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. எனவே இந்த தடையை நீக்க வேண்டும் என்று கொவிஷீல்டு மருந்து தயாரிப்பு அதிபர் ஆதர்பூன வல்லா வேண்டுகோள் விடுத்து இருந்தார்.

இந்த நிலையில் இந்தியாவின் அவசர தேவைக்கு அமெரிக்காவில் உற்பத்தியாகும் பல்வேறு சாதனங்கள் தேவைப்பட்டன.

இது சம்பந்தமாக இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜீத்தோவல், அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சுல்லிவானுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

இதையடுத்து கொவிஷீல்டு மருந்து தயாரிப்புக்கான மூலப்பொருள்களை அனுப்ப அமெரிக்கா சம்மதம் தெரிவித்துள்ளது. அத்துடன் பல்வேறு மருத்துவ சாதனங்களையும் அனுப்பவும் அமெரிக்கா சம்மதித்துள்ளது.

இதன்படி கொரோனா சிகிச்சை தெராபெட்டிக் கருவிகள், அதிவேக கொரோனாப் பரிசோதனை கருவிகள், வெண்டிலேட்டர், பெர்சனல் புரொடெக்டிவ் சாதனம் ஆகியவற்றை அமெரிக்கா அனுப்புகிறது. இத்துடன் ஒக்சிஜன் உற்பத்தி செய்யும் சாதனங்களும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

ஐதராபாத்தில் உள்ள பயோ-இ நிறுவனம் கொரோனா தடுப்பூசி மருந்தை உற்பத்தி செய்ய உள்ளது. இதற்கு அமெரிக்கா வளர்ச்சி நிதி அமைப்பு நிதிஉதவி செய்ய முன்வந்துள்ளது. இந்த நிறுவனம் 2022ஆம் ஆண்டு 100 கோடி அளவிலான தடுப்பூசி மருந்துகளை உற்பத்தி செய்ய இருக்கிறது.

மேலும் தற்போது இந்தியாவில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு மருத்துவ ஆலோசனைகள் மற்றும் உதவிகள் வழங்குவதற்காக சிறப்பு குழுவையும் அமெரிக்கா உருவாக்கி உள்ளது.

அமெரிக்காவின் துணை அதிபராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹரிஸ் இருந்து வருகிறார். அவர் இந்தியாவுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய அமெரிக்கா தயாராக இருப்பதாக கூறி இருக்கிறார்.

இந்திய அரசோடு நெருக்கமாக பணியாற்றி அவசர தேவைக்கான சாதனங்களையும், உதவிகளையும் அமெரிக்கா வழங்கும் என்று கூறியுள்ளார்.

இதேபோல ரஷ்யாவும் இந்தியாவுக்கு உதவிகள் செய்வதாக அறிவித்துள்ளது. இதன்படி 4 லட்சம் ரெம்டிசிவர் மருந்துகளை அனுப்புவதாக கூறி இருக்கிறது. இதற்கு அமெரிக்காவில் அனுமதி பெற வேண்டும். அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

இத்துடன் ஒக்சிஜன் உற்பத்தி கருவிகள், மருந்துகள் போன்றவற்றை அனுப்பி வைப்பதாக அறிவித்துள்ளது

போதையற்ற நாட்டை உருவாக்குவதே அரசின் திட்டம் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் தெரிவிப்பு

போதையற்ற ஒரு நாட்டை உருவாக்குவதே எமது அரசாங்கத்தின்திட்டம் அதனாலேயேபோதைப்பொருள் பாவனையினை குறைப்பதற்கான செயற்றிட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றதென பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்று நிகழ்வொன்றில் உரையாற்றுகையில், அவர் மேலும் தெரிவித்ததாவது சிறுவர் துஷ்பிரயோகங்களை செய்கின்றவர்கள் மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதுடன், கடந்த காலத்துடன் ஒப்பிடும் போது சிறுவர் துஷ்பிரயோகங்கள் பெருமளவு குறைந்திருக்கின்றன. அதே போன்று போதைப்பொருள் பாவனையினை குறைப்பதற்கான செயற்றிட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. போதைப் பொருளுடன் சம்பந்தப்பட்ட பலர் இந்த ஆட்சியில் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

போதையை ஒழித்து போதையற்ற ஒரு நாட்டை உருவாக்குவதிலே நாட்டினுடைய ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசாங்கம் கவனம் செலுத்திவருகின்றது. போதையற்ற ஒரு சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும், அந்த போதையற்ற ஆரோக்கியமான சமுதாயத்தினை உருவாக்கினாலே நாட்டைக் கட்டியெழுப்பி இந்த நாட்டை சுபீட்சத்தின்பால் கொண்டு செல்ல முடியும்.

ஆகவே போதையை ஒழிக்கின்ற, மகளிர் நலனைப் பேணுகின்ற அதேபோன்று சிறுவர் நலனைப் பேணுகின்ற வகையிலான வேலைத்திட்டங்களை அரசாங்கம் விரிவாக முன்னெடுத்துவருகின்றது என்று தெரிவித்திருந்தார்.

கொரோனாப் பாதுகாப்பு கருதி கோறளைப்பற்றில் கூட்டம்

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் ரமழான் காலத்தில் பொதுமக்களின் கொரோனா வைரஸ்பாதுகாப்பு கருதி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் அவசர கூட்டம் இடம்பெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ரீ.நஜீப்கான் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன, முஸ்லிம் சமூக பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ.எம்.சியாத், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ்.நௌபர், பொது சுகாதார பரிசோதகர்கள், பள்ளி வாசல் பிரதிநிதிகள், வர்த்தகர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.

மே மாதம் 31 வரை கொரோனா வைரஸ் பரவலின் மூன்றாவது நிலை ஆபத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ள நிலையில் அத்தியாவசிய சேவைகளைத் தவிர பல் அங்காடிகள், நிதி நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் உள்ளிட்டவற்றில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை 50 வீதமாக பேணுதல், ரமழான் காலம் என்பதால் பள்ளிவாசல்களில் தொழுகைக்கு 50 பேருக்கு அனுமதி, உணவகங்களில் ஆசன எண்ணிக்கையில் 50 வீதம் அனுமதி, மரண வீட்டில் உச்ச பட்சம் ஒரு தடவையில் 25 பேருக்கு மாத்திரம் அனுமதி, பொதுமக்கள் ஒன்று கூடலுக்கு அனுமதி இல்லை, களியாட்டங்கள், இசை நிகழ்வுகள், கடற்கரை விருந்துபசாரங்கள் மூடப்பட்டிருக்கும், நீச்சல் தடாகங்கள் மூடப்பட்டிருக்கும் போன்ற பல்வேறு விடயங்கள் உள்ளடக்கியதாக வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் தற்போது ரமழான் காலமாக உள்ள நிலையில் கொரோனா வைரஸ் தாக்கம் மீண்டும் பிரதேசத்தில் பரவாத நிலையில் பொதுமக்கள் அனைவரும் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி நடந்து கொள்ள வேண்டும், அத்தோடு பள்ளிவாசல்களில் பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் ஆகியோருக்குத் தொழுகை முற்றாக தடை செய்யப்படும், வெளி இடங்களில் இருந்து வருகை தருவோர்கள் சுகாதார திணைக்களத்திடம் அறிவிக்க வேண்டும்.

ரமழான் காலம் என்பதால் பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி கொரோனா வைரஸ் தாக்கம் பரவாத நிலையில் நடந்து கொள்ள வேண்டும், சுகாதார விதிமுறைகளை மீறி நடந்து கொள்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுகாதார நடைமுறைகளை பேணாதவர்களுக்கு மட்டக்களப்பில் பொலிஸ் சட்ட நடவடிக்கை

மட்டக்களப்பு, ஏப்.26

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா அச்சுறுத்தலில் இருந்துமக்களைபாதுகாக்கும் வகையில் சுகாதார நடைமுறைகளை கடுமையாக கடைப்பிடிக்கச்செய்யும் வகையிலான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர்.

நேற்று முதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் முகக்கவசம் அணிந்து செல்லாதவர்கள் மற்றும் போக்குவரத்தில் முறையாக சுகாதார நடைமுறைகளைப்பேணாத போக்குவரத்து சேவைகள் தொடர்பில் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹெட்டியாராட்சி தலைமையில் இந்த நடவடிக்கைகள் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது முகக்கவசம் அணியாதவர்கள், போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்களில் சுகாதார நடைமுறையை பேணாத வாகனங்கள் மீது சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

முகக்கவசங்களை சரியாக அணியாதவர்களுக்கு அது தொடர்பிலான விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டன. இவ்வாறான தொடர்ச்சியான நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

பெண் சிறுதொழில் முயற்சியாளர்களின் வியாபாரத்தை வலுப்படுத்த கண்காட்சி

மட்டக்களப்பு, ஏப்.26

'கிராமியப் பெண்களின் பொருளாதாரத்திற்கு கைகொடுப்போம்' எனும் கருத்திட்டத்தின் கீழ் சிறு தொழில் முயற்சியாளர்களின் வியாபார அந்தஸ்தினை வலுப்படுத்தும் முகமாக காவியா நிறுவனம் கூட்டுறவு சுயதொழில் அபிவிருத்திச் சங்கங்களுடன் இணைந்து 13 ஆவது தடவையாக நடாத்தும் மாபெரும் கண்காட்சியும் விற்பனை தொழில் சந்தையும் மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

காவியா சுய தொழில் நிறுவனத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் திருமதி யோகமலர் அஜித்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான க.கருணாகரன் கலந்து கொண்டு கண்காட்சியை திறந்து வைத்து காட்சிக்கூடங்களை பார்வையிட்டார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களின் சிறுதொழில் உற்பத்திப் பொருள்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், நஞ்சற்ற மரக்கறிகள், கடலுணவு உற்பத்திப்பொருள்கள், ஆடைவகைகள், பழ மரங்கள், கைப்பணிப்பொருள்கள் போன்ற பல்வேறுபட்ட பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இக்கண்காட்சியானது கடந்த வருடம் கொரோனா அச்சம் காரணமாக இடம்பெறாத போதிலும் இவ்வாண்டு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொலிஸ் பாதுகாப்புடன் தொடர்ச்சியாக இரு தினங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பிரதேச செயலக கலாசார பேரவையின் சஞ்சிகை வெளியீடு

வாழைச்சேனை பிரதேச செயலக கலாசார பேரவையின் ஏற்பாட்டில் சஞ்சிகை வெளியீடும் கௌரவிப்பு நிகழ்வும் பிரதேச செயலக கேட்போர் கூட மண்டபத்தில் இன்று இடம்பெற்றது.

கலாசார பேரவையின் ஏற்பாட்டில் இளம்பரிதி சஞ்சிகையின் முதற்பிரதி பிரதேச செயலாளரினால் உதவிப் பிரதேசசெயலாளருக்குவழங்கிவெளியீடு செய்யப்பட்டது.

இளம்பரிதி மற்றும் 'புதிய மழை' சஞ்சிகையில் வாழைச்சேனை பிரதேச செயலாளர்பிரிவிலுள்ளகலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கல்வியியலாளர்களின் விவரங்கள் வெளியீடு செய்யப்பட்டதுடன், இதன் பிரதிகள் பிரதேச கலைஞர்களுக்கும் வழங்கிவைக்கப்பட்டது.

பிரதேச செயலாளர் கோ.தனபால சுந்தரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர் திருமதி.ஷோபா ஜெயரஞ்சித், பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி.நிருபா பிருந்தன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.கங்காதரன், செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச கலைஞர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு

ஐ.பி.எல். 2021 சென்னைக்கு தொடர்ச்சியாக நான்காவது வெற்றி!

ஐ.பி.எல். 2021 தொடரின் 19 ஆவது லீக் போட்டியில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியை வீழ்த்திய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 69 ஓட்டங்களால் சிறப்பான வெற்றியைப் பதிவுசெய்துள்ளது.

மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்களைச் சேர்த்தது. ரவீந்திர ஜடேஜா 28 பந்துகளில் 62 ஓட்டங்களை விளாசியிருந்தார். இவர் இறுதி ஓவரில் ஹர்ஷல் பட்டேலின் பந்துவீச்சில் 37 ஓட்டங்களைக் குவித்தார். டு பிளெஸிஸ் 50 ஓட்டங்களையும் ருத்துராஜ் கெய்க்வாட் 33 ஓட்டங்களையும் சுரேஸ் ரெய்னா 24 ஓட்டங்களையும் எடுத்தனர். பெங்களூர் அணியின் சார்பாக ஹர்ஷல் பட்டேல் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

192 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணியின் நான்கு பேர் மட்டுமே இரட்டை இலக்க ஓட்டங்களை எடுக்க, 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களை மாத்திரம் பெற்ற பெங்களூர் அணி, 69 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. தேவ்தத் படிக்கல் 34 ஓட்டங்களையும் க்ளென் மக்ஸ்வெல் 22 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். சென்னை அணியில் ஜடேஜா மூன்று விக்கெட்டுக்களையும் இம்ரான் தாகிர் இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக சகல துறையிலும் சிறப்பாக பிரகாசித்த ரவீந்திர ஜடேஜா தெரிவானார்.

நேற்றைய வெற்றியோடு தொடர்ச்சியாக நான்கு போட்டிகளில் வென்றிருக்கும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 8 புள்ளிகளோடு முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது. டெல்லி கப்பிட்டல்ஸ், ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகளும் தலா எட்டுப் புள்ளிகளை எடுத்திருந்தாலும் ஓட்ட சராசரி அடிப்படையில் முறையே இரண்டாம் மூன்றாமிடங்களில் உள்ளன.

ஐ.பி.எல். 2021 சுப்பர் ஓவரில் ஹைதராபாத்தை வென்றது டெல்லி!

ஐ.பி.எல். 2021 தொடரின் 20ஆவது லீக் போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணி சுப்பர் ஓவரில் சன்ரைசஸ் ஹைதராபாத் அணியை வென்றது.

சென்னையில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி கப்பிட்டல்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ப்ரித்வி ஷா 53 ஓட்டங்களையும் ரிஷப் பண்ட் 37 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். சன்ரைசஸ் ஹைதராபாத் அணியின் சித்தார்த் கௌல் 2 விக்கெட்டுக்களையும் ரஷிட்கான் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

160 என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்குக் களமிறங்கிய சன்ரைசஸ் ஹைதராபாத் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் டெல்லி அணி பெற்ற 159 ஓட்டங்களையே பெற்றது. கேன் வில்லியம்சன் ஆட்டமிழக்காது 66 ஓட்டங்களையும் ஜொனி பெயர்ஸ்டோ 38 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். டெல்லி கப்பிட்டல்ஸ் அணியின் அவேஷ்கான் 3 விக்கெட்டுக்களையும் அக்ஸர் பட்டேல் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இரு அணிகளதும் ஓட்ட எண்ணிக்கை சம நிலையில் இருந்ததால், வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க போட்டி சுப்பர் ஓவருக்கு எடுத்துச் செல்லப்பட்டது. சுப்பர் ஓவரில் முதலில் துடுப்பெடுதாடிய சன்ரைசஸ் ஹைதராபாத் அணி 7 ஓட்டங்களைப் பெற, பதிலுக்கு களமிறங்கிய டெல்லி கப்பிட்டல்ஸ் அணி இறுதிப் பந்தில் வெற்றி இலக்கை அடைந்து.

இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக ப்ரித்வி ஷா தெரிவுசெய்யப்பட்டார்.

கொரோனா பரவல் தீவிரம்; ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகினார் அஸ்வின் சில வெளிநாட்டு வீரர்களும் விலகுகின்றனர்

ஐ.பி.எல். 2021 தொடரிலிருந்து டெல்லி கப்பிட்டல்ஸ் அணி வீரரும் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளருமான அஸ்வின் விலகியுள்ளார். கொரோனா வைரஸ் பரவலின்போது குடும்பத்துடன் இருக்கவேண்டிய அவசியம் இருப்பதால் இந்த முடிவினை தான் எடுத்தார் என அஸ்வின் தெரிவித்துள்ளார். அதேநேரம், சூழல் நல்லபடியாக மாறினால் நான் அணிக்குள் மீண்டும் வருவேன் என்றும் அஸ்வின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனது டுவிட்டரில், 2021 ஐ.பி.எல். தொடரிலிருந்து நான் விடைபெற்றுக் கொள்கிறேன். கொரோனா வைரஸுக்கு எதிராக என்னுடைய குடும்பத்தார் போராடி வரும் நிலையில், இந்த கடினமான நேரத்தில் அவர்களுடன் இருப்பது அவசியம். அனைத்தும் சரியான திசையில் சென்றால் நான் மீண்டும் அணியில் சேர்வேன் என எதிர்பார்க்கிறேன் என அஸ்வின் பதிவிட்டுள்ளார்.

இந்த கடினமான தருணத்தில் அஸ்வினுக்கு முழு ஆதரவு அளிப்பதாக டெல்லி கப்பிட்டல்ஸ் அணி நிர்வாகமும் தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் கொரோனாவின் தாக்கம் தீவிரமடைந்து வருவதால் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் கேன் ரிச்சர்ட்சன், அடம் ஸம்பா ஆகியோரும் ராஜஸ்தான் ரோயல்ஸின் அன்ட்ரூ டையும் தத்தமது அணிகளிலிருந்து விலகுவதற்கான கோரிக்கைகளை முன்வைத்து, அவை அணிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆஸ்திரேலிய நாட்டவர்களான இவர்கள், இந்தியாவிலிருந்து தமது நாட்டுக்கான விமானப் பயணங்கள் தடைப்படும் வாய்ப்பு இருப்பதால் அதற்கு முன்னதாக நாடு திரும்ப முடிவெடுத்ததாகக் கூறப்படுகிறது.

இலங்கை - பங்களாதேஷ் முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது!

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்துள்ளது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்களை இழந்து 541 ஓட்டங்களை பெற்றபோது ஆட்டத்தை இடை நிறுத்திக்கொண்டு இலங்கையைத் துடுப்பெடுத்தாட அழைத்தது.

தனது முதலாவது இன்னிங்ஸை விளையாடிய இலங்கை அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 648 ஓட்டங்களை பெற்ற பின்னர் ஆட்டத்தை இடைநிறுத்தியது. இலங்கை அணியின் திமுத் கருணாரத்ன 244 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா 166 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பங்களாதேஷ் அணியின் டஸ்கின் அகமட் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

107 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய பங்களாதேஷ் அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கிட, போட்டி வெற்றி தோல்வி இன்றி சமநிலையில் முடிவடைந்தது. பங்களாதேஷ் அணியின் தமீம் இக்பால் 74 ஓட்டங்களையும் மொமினுல் ஹக் 23 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்டனர். இலங்கை அணியின் சுரங்க லக்மால் வீழ்த்தப்பட்ட இரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தார். போட்டியின் நாயகனாக திமுத் கருணாரத்ன தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவதும் தொடரின் இறுதியுமான டெஸ்ட் போட்டி 29 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

ஐ.பி.எல். 2021

ஐ.பி.எல். 2021 தொடரின் இன்றைய லீக் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகள் மோதவுள்ளன. அஹமதாபாத்தில் நடைபெறவுள்ள இந்தப் போட்டி இரவு 7.30க்கு ஆரம்பமாகும்.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

கர்தினாலை திருப்திப்படுத்தவா ரிஷாத் பதியுதீன் கைது நாடகம்?

அமீர் அலி கேள்வி

கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை திருப்திப்படுத்துவதற்காகவா நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டார் என்ற சந்தேகம் காணப்படுகிறது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது என கர்தினால் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னணியை அவர் பகிரங்கப்படுத்த வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளர் அமீர் அலி தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை கைது செய்ய முன்னர் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை பின்பற்றாமல் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்படும் போது அதற்கான காரணம் அவருக்கும், அவரது குடும்பத்தாருக்கும் தெரிவிக்கப்படவில்லை. அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கைது இடம் பெற்றுள்ளது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது எனவும், குண்டுத்தாக்குதலின் விசாரணை நடவடிக்கைகள் அதிருப்தியளிப்பனவாகவும் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டார்.

அவரைத் திருப்திப்படுத்துவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டாரா என்ற சந்தேகம் தோற்றம் பெற்றுள்ளது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது என மெல்கம் ரஞ்சித் கர்தினால் ஆண்டகை குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னணி தன்மையை அவர் நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியை அறிந்து கொள்ளும் முக்கியத்துவம் கத்தோலிக்க மக்களுக்கு மாத்திரமல்ல முஸ்லிம் சமூகத்துக்கும் உண்டு. குண்டுத்தாக்குதல் சம்பவத்தால் சாதாரண முஸ்லிம் சமூகத்தினர் கூட ஏதாவதொரு வழியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் குண்டுத் தாக்குதல்தாரிகளுக்கு நிதியுதவி வழங்கினார் என எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

கொலோசிஷ் நிறுவனத்திற்கு உலோகங்கள் வழங்கியமை தொடர்பில் விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

கொலோசிஷ் நிறுவனத்துக்கு உலோகம் வழங்கியமை தொடர்பாக விசாரணைகளை துரிதகரமாக முன்னெடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கடந்த 8 ஆம் திகதி இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூலமாக அறிவித்துள்ளார்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்ற வேளை அக்காலக்கட்டத்தில் இராணுவத் தளபதி பதவி வகித்த மகேஷ் சேனாநாயக்கவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுடன் தொலைபேசியில் உரையாடியமை தொடர்பாகப் பல மாறுபட்ட கருத்துக்கள் குறிப்பிடப்பட்டன.

இராணுவத் தளபதியின் கடமைகளுக்கு ரிஷாத் பதியுதீன் இடையூறு விளைவித்தார் எனவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இந்த விடயம் தொடர்பில் முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலும், ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிலும் அரசியல் மட்டத்தில் குறிப்பிடுவதை போன்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தனது கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கவில்லை எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதி தற்போதைய பொலிஸ் மா அதிபர் சி. டி விக்ரமரட்ன பதில் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றும் போது குண்டுத்தாக்குதல் தொடர்பில் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்ட நாடாளுமன்றத் தெரிவுகுழுவிற்கு எழுத்துமூலமாக அறிவித்தார்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சாட்சியம் உள்ளதாகக் கைது செய்வதும், சாட்சியம் இல்லை என்று பிறகு விடுதலை செய்வதும் வழமையான செயற்பாடாகக் காணப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டுள்ளார். சிறுபான்மை சமூகத்துக்கு எதிராகக் கடுமையான போக்கை அரசாங்கம் முன்னெடுக்கிறது.– என்றார்.

பொன்னாலையில் குடும்பம் ஒன்றின் தகரக் கொட்டகை எரிந்து நாசம்!

முக்கிய ஆவணங்களும் பணமும் தீக்கிரை

பொன்னாலை மேற்கில் நான்கு பேரை உள்ளடக்கிய குடும்பம் ஒன்று வசித்த தகரக் கொட்டகை ஒன்று எரிந்து சாமப்ராகியுள்ளது. தெய்வாதீனமாக எவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. எனினும் பெறுமதிமிக்க ஆவணங்களும் ஒரு தொகைப் பணமும் எரிந்து அழிந்துள்ளன.

கடந்த சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ரவிக்குமார் ஜோன்சன் மரீன் என்பவரின் தகரக் கொட்டகையே எரிந்து அழிந்தது. சுவாமி படத்துக்கு ஏற்றிய விளக்குத் திரியை எலி இழுத்துச் சென்றதாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணவன், மனைவி மற்றும் இரு பிள்ளைகளை உள்ளடக்கிய மேற்படி குடும்பம் குறைந்த வருமானம் உடையது என்பதால் சுயமாக வீட்டைக் கட்டிக்கொள்ள முடியவில்லை. இதனால் தகரக் கொட்டகை ஒன்றினுள் வசித்து வந்தது. அரச வீட்டுத்திட்டத்துக்கு விண்ணப்பித்த போதிலும் இது வரை வழங்கப்படவில்லை.

சம்பவ நேரம் குடும்பத் தலைவி சுவாமி படத்துக்கு விளக்கேற்றிவிட்டு வெளியே வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது வீடு தீப்பற்றி எரிந்தது. உடனடியாக அங்கு ஒன்றுகூடிய அயலவர்களும் குடும்பத்தினரும் தண்ணீர் ஊற்றித் தீயை அணைக்க முற்பட்டபோதிலும் கொட்டகை வீடு முழுவதும் தீப்பற்றி எரிந்து அழிந்தது.

உள்ளே இருந்த காணி உறுதி, பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் எரிந்து அழிந்துள்ளன. கடற்றொழிலாளியான இவர் புதிதாக வாங்கி வைத்திருந்த வலைகள். மின்சாதனங்கள், சமையல் பாத்திரங்கள், உடுபுடைவைகள் உட்பட அனைத்துமே எரிந்து அழிந்துள்ளன. அணிந்திருந்த உடையைத் தவிர மாற்று உடைகூட எஞ்சியிருக்கவில்லை.

குறித்த குடும்பஸ்தர் பொன்னாலை ஸ்ரீகண்ணன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொருளாளராக இருந்தமையால் தொழிலாளர்களுக்கு இடையே சுழற்சி முறையில் கடன் வழங்குவதற்கான லட்சக்கணக்கான ரூபா பணமும் இவரிடம் இருந்துள்ளது. அந்தப் பணம் மற்றும் சங்க ஆவணங்களும் தீயில் எரிந்து அழிந்தன. எனினும் ஒருதொகை நாணயத் தாள்கள் அரைகுறையில் எரிந்த நிலையில் மீட்கப்பட்டன.

சம்பவ இடத்துக்கு வந்த கிராம சேவையாளர் ந.சிவரூபன் மற்றும் வட்டுக்கோட்டை பொலிஸார் ஆகியோர் சேத விவரங்களைப் பார்வையிட்டனர். சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறைந்த வருமானத்தில் இரு குழந்தைகளுடன் வாழ்ந்துவந்த மேற்படி குடும்பம் இருந்த கொட்டகையும் எரிந்து அழிந்துள்ளமையால் வசிப்பிடம் இன்றி நிர்க்கதி நிலையை அடைந்துள்ளது.

சிறுபான்மை இனங்களை அழித்து அடிமைப்படுத்த முயற்சிக்கிறது அரசு

இந்திய சமூக ஜனநாயகக் கட்சி வேதனை

சிறுபான்மை இனங்களை அழித்து, அடிமைப்படுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கின்றது என்பதையே நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதீன் கைதின் ஊடாக தோன்றுகின்றதென இந்திய சமூக ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதீன் கைது செய்யப்பட்டுள்ளமைக்குக் கண்டனம் தெரிவித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே சமூக ஜனநாயகக் கட்சி இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

குறித்த ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு –

நாட்டில் ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் முஸ்லிம் விரோத செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

ஆரம்பத்தில் இந்த அரசாங்கத்தால் ஈழத்தமிழர்கள் இலக்கு வைக்கப்பட்டார்கள் தற்போது முஸ்லிம்களை இலக்கு வைத்து சர்வதிகார போக்கை வெளிப்படுத்தி வருகின்றது.

அதாவது சிறுபான்மை இனங்களை அழித்து, அடிமைப்படுத்துவதே தங்களது நோக்கம் என்பதையே அரசாங்கம் தற்போது வெளிப்படுத்தியுள்ளது.

முஸ்லிம்களின் கலாசாரம், அடையாளங்கள் ஆகியவற்றுக்குத் தடை விதிப்பதும், முஸ்லிம் இயக்கங்களுக்கு தடைவிதிப்பதும், முஸ்லிம் தலைவர்களைக் கைது செய்வதும் என முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இதன் ஒரு பகுதியாகவே ரிஷாத் பதியுதீனும் கைது செய்யப்பட்டுள்ளார். இதனை வன்மையாகக் கண்டிப்பதுடன் இத்தகைய செயற்பாடுகளை அரசு உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நாளை இலங்கை வருகிறார் சீனப் பாதுகாப்பு அமைச்சர்

இரு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் பெங் நாளை 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கை வருகின்றார்.

இரு தரப்பு இராஜதந்திர நிரலுக்கமைவாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பாதுகாப்பு துறைசார் முக்கியஸ்தர்களையும் சந்தித்து சீன பாதுகாப்பு அமைச்சர் கலந்துரையாடவுள்ளார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நாட்டில் தங்கியிருக்கும் ஜெனரல் வெய் ஃபெங் அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் துறைமுகர் நகர் உட்பட முக்கிய சீன திட்டங்களையும் பார்வையிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இருதரப்பு வர்த்தகம், முதலீடு, நிதியுதவி மற்றும் மூலோபாய ஒத்துழைப்பு போன்றவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை போன்று இரு தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்புக்களை அடுத்த கட்டத்துக்கு விரிவுபடுத்துவது சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் ஃபெங்கின் இலங்கை விஜயத்தின் முக்கிய நோக்கமாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.04.2021 இல் வெளியிடப்பெற்றது.